விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 358 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 26 புதன்கிழமை (11.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு

## தமிழர் தாயகத்தில் உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டம்



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்குக் கிழக்கு தமிழர் தாயகத்தில் காணாமலாக்கப்பட்ட உறவுகளால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. 03

## ஐந்து நாள் காய்ச்சல் இளம் தாய் மரணம்

### பருத்தித்துறையில் சம்பவம்

(கரணவாய்)

ஐந்து நாள் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இளம் தாய் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த சுரேஷ் குமார் ரஞ்சிதா (வயது- 33) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த ஆறு, ஏழு, எட்டு ஆம் திகதிகளில் காய்ச்சல் ஏற்பட்டதைத் தொடர்ந்து பனடோல் உட்கொண்டதாகவும் காய்ச்சல் 15

அநுர அரசாங்கத்தின் காலத்தில்

# தமது பிரச்சினை தீர்க்கப்படும் என வடக்கு மக்கள் நம்புகின்றனர்

## பிரிட்டன் தூதுவரிடம் வடக்கு ஆளுநர்

*(யாழ்ப்பாணம்)*

அநுர அரசாங்கத்தின் காலத்தில் தமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என வடக்கு மக்கள் நம்புகின்றனர் என பிரிட்டன் தூதுவரிடம் வடக்கு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

*(16ஆம் பக்கம் பார்க்க)*



## வடமராட்சியில் கைதான 18 இந்திய மீனவர்கள் விடுதலை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 18 இந்திய மீனவரும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தினால் நிபந்தனை 15

## விவசாயிகளுக்கு உரமானியம்

(கொழும்பு)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு மானியமாக 55,000 மெற்றிக் தொன் மியூரேட் ஒப் பொட்டாஷ் உரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விடயத்துடன் தொடர்புடைய இருதரப்பு உடன்படிக்கை உலக 15

## உதயங்க, கபில சந்திரசேன அமெரிக்கா நுழையத் தடை



(கொழும்பு)

ரஷ்யாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவும் ஸ்ரீ லங்கன் எயர்லைன்ஸின் முன்னாள் பிரதம 15

யாழ்.போதனா வைத்தியசாலைக்குள்

## அர்ச்சுனா குழப்பம் விளைவித்தால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார்

### மருத்துவர் சத்தியமூர்த்தி எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு குழப்பம் விளைவிக்க வருவாரெனின், வாசலிலேயே வைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் 15

அமைச்சர் சந்திரசேகரன் தலைமையில்

## வெள்ளியன்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இ.சந்திரசேகரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டச் 15

## பாராளுமன்ற இணையம் சபாநாயகரின் கலாநிதி பட்டத்தை நீக்கியது

(கொழும்பு)

சபாநாயகர் அசோக ரன்வலவின் 02

காரைநகரில் அமைந்துள்ள

## படகு தயாரிப்பு நிலையத்தை மீள் கட்டமைக்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்திற்குரிய காரைநகர் படகு தயாரிப்பு நிலையத்தினை மீள்கட்டமைப்பு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்திற்குரிய காரைநகர் படகு தயாரிப்பு நிலையத்தின் மீள் கட்டமைப்புக்காக நடவடிக்கை 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேலணை பிரதேச சபை
### 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் வரைபு பொதுமக்கள் பார்வைக்கு சமர்ப்பித்தல்

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் 168ம் பிரிவிற்கிணங்க வேலணை பிரதேச சபையின் 2025ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 09.12.2024ம் திகதி தொடக்கம் 16.12.2024ம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள், எமது பொது நூலகங்கள் மற்றும் எமது இணையத்தில் (www.velanai.ps.gov.lk) பார்வையிடலாம்.

கருத்துக்கள் எதுவும் இருப்பின் 16.12.2024 திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக தெரிவிக்கமுடியும் என்பதனை இத்தால் பகிரங்கமாக அறியத் தருகின்றேன்.

மின்னஞ்சல் :
velanaips@gmail.com
தொலைபேசி இல :
021 221 0180/ 021 221 1506

தி.தியாகச்சந்திரன்
செயலாளர்,
வேலணை பிரதேச சபை.
(C-1770)



## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 26.05.1936 மறைவு 08.12.2024

எமது பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் **திரு. செல்வராஜா சுபச்செல்வன்** அவர்களுடைய அன்புத் தந்தையார்

**அமரர் செல்லப்பா செல்வராஜா**
**(ஓய்வுநிலை அதிபர்)**

அவர்கள் 08.12.2024 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... **பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**
(C-1768)


# தன் மீதான நம்பிக்கையை அரசு கட்டியெழுப்ப வேண்டும்
## ஐ.நா வதிவிடப் பிரதிநிதி

நாட்டில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதும், சகலரும் அதற்கு மதிப்பளிப்பதை உறுதிப்படுத்துவதும் அத்தனை இலகுவான விடயமல்ல எனவும் சுட்டிக்காட்டிய ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரென்ஞ், மக்கள் மத்தியில் அரசாங்கம் தம்மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் ஊடாகவே அதனைச் செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று செவ்வாய்க்கிழமை (10) அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் அறிமுகப்படுத்தப்பட்டு 76 வருடங்கள் பூர்த்தியடைந்திருப்பதை நினைவுகூரும் விதமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு விசேட உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீண்டும் "ஏ" தரத்தைப் பெற்றுக் கொண்டமை குறித்தும், ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்புக் கிளை அலுவலகத்துடன் இணைந்து ஆணைக்குழு முன்னெடுத்துவரும் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் குறித்தும் தனது பாராட்டினை வெளிப்படுத்திய ஐ.நா வதிவிடப்பிரதிநிதி, அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உருவாக்கத்தை நினைவுகூரும் அதே வேளை, அப்பிரகடனத்தில் உள்வாங்கப்பட்டுள்ள உரிமைகளின் முக்கியத்துவம் பற்றியும் சிந்தித்து செயலாற்றவேண்டும் என வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி உலகிலேயே தமிழ் மற்றும் சிங்களம் உள்ளடங்கலாக 500 க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஓர் ஆவணமாக இந்த அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் காணப்படுவதாகவும், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமைகளில் பலவற்றை அடைந்துகொள்வதை முன்னிறுத்தி மேலும் வலுவான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதாகவும் மார்க் அன்ட்ரூ பிரென்ஞ் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை நாட்டின் பொருளாதார மீட்சிக்கும், வளர்ச்சிக்கும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டியது அவசியமாகும். குறிப்பாக இக்காலப்பகுதியில் பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகப்பிரிவினரின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும், அவர்களை இலக்காகக்கொண்ட சமூகப் பாதுகாப்பு செயற்திட்டங்களை வலுப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## சபாநாயக...

கல்வித் தகுதி தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், இலங்கை பாராளுமன்ற இணையத்தளம் அவரது சுயவிபரத்தில் இருந்து"கலாநிதி" என்ற சொல்லை நீக்கியுள்ளது.

முன்பு "கலாநிதி"அசோக ரன்வல என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இப்போது அவரது பெயர் 'அசோக ரன்வாலா எம்.பி' என்று குறிப்பிடப்படும். இது அவர் 'கலாநிதி' பட்டம் பெற்றதாகக் கூறப்படுவது சட்டபூர்வமானதா? என்பது குறித்து மேலும் சந்தேகங்களை எழுப்புகிறது.

சபாநாயகரின் சுயவிபரத்திலிருந்து "கலாநிதி" என்ற தலைப்பை நீக்கும் வகையில் கடந்த 24 மணி நேரத்திற்குள் இணையத்தளம் புதுப்பிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. (ம-7)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 11.11.2024 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் திருமதி ஜெகதீஸ்வரி கந்தசாமி [ஈசு]

அவர்களின் 31 ஆம் நினைவுநாள் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த 09.12.2024 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. 11.12.2024 இன்று புதன்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள சபிடீகரண கிரியையில் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் பருத்தித்துறை சிவன்கோவில் கலாமன்றத்தில் (புலோலி பசுபதீஸ்வரர் சமேத பார்வதவர்த்தனி திருமண மண்டபம்) நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 16.10.2024அன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அன்னார் திடீர் சுகயீனமுற்று 24 ஆம் விடுதி அவசர சத்திர சிகிச்சைப் பிரிவிலும் பின்னர் 16 ஆம் விடுதியிலும் இருந்த காலப் பகுதியில் அன்னாரைப் பராமரித்த வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்த வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு,

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த வெளிநாட்டில், உள்ளநாட்டில் உள்ள உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் இக் காலப் பகுதியில் உணவளித்து உதவியவர்களுக்கும், கீரிமலையில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோவிலடி,
தும்பளை வீதி, பருத்தித்துறை.
(618)

தகவல்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் தினத்தில்

# தீச்சட்டிகள் ஏந்தியவாறு போராட்டம்

(நெளுக்குளம்)

**சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளன.**







அவ்வகையில் இலங்கை அரசிடம் நீதி கோரிய போதும், தீர்வுகள் கிடைக்காத நிலையில் தற்போது சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

இதுவரை தீர்வு கிடைக்காததினால் சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தின் போது கையில் தீச்சட்டியுடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் வேண் டாம், இழப்பீடு வேண் டாம், காணாமல் ஆக்கப்பட் டோர் அலுவலகம் வேண் டாம், சர்வதேசமே நீதியைத் தா போன்ற பல்வேறு கோசங்களையும் எழுப்பி போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் என பலரும் கலந்து கொண்டனர். (ஙி-8-33-250-285-299-316)


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16.04.1940



மறைவு
23.11.2023

அமரர்.
செல்லையா மார்க்கண்டு

எம் இதயம் எனும் கோவிலில் தெய்வமாய் நிறைந்திட்டவர்-நீங்கள்
நம்பமுடியவில்லை ஓராண்டு கடந்ததை
அன்பின் சிகரமாய் அரவணைப்பின் அர்த்தமாய் வாழ்ந்தவர் நீங்கள்
வார்த்தைகளால் நிரப்ப முடியவில்லை நீங்கள் இல்லாத வெற்றிடத்தை
ஆண்டொன்று கடந்தாலும் உங்கள் இன்முகமும் புன்சிரிப்பும்
எம் மனதை விட்டு கலையவில்லை ஐயா
நேசமாய் ஆசையாய் வளர்த்த பிள்ளையும்
பாசமாய் பண்புடன் வளர்த்த பேரப்பிள்ளைகளும்
உங்களை இழந்து தவிக்கின்றார்கள் தினந்தோறும்
இறைவனுக்கே இணையாகி வானிற்கு நிகராகி
பேரன்பிற்கு இலக்கணமானவரே
கண்ணீர் மல்க வேண்டுகின்றோம் மீண்டும் நீங்கள்
எம் இடத்தில் வரவேண்டுமென்று
எங்களின் வளமான வாழ்விற்கு வழிகாட்டியாக நின்றவர் நீங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

இத்தாவில், பளை.
தொடர்பு:- 077 610 8665
(617)
நீங்கா நினைவுடன் மனைவி மகன்,
மருமகன், பேரப்பிள்ளைகள்



கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரது (MA.PHD)
குருபூசைத்தினம்

கார்த்திகை ரேவதி:- ஏகாதசி

அருளென்ற வடிவுதாங்கி
அன்பென்ற வடிவினார்க்குப்
பொருளென்ற பதம் கொடுக்கும்
புவனநா யகியே நீங்கா
இருளென்ற மலத்தழுந்தி
இழிவென்ற வாழ்வுற்றேனை
தெருளென்ற சோதிகாணத்
திருக்கடைக் கண் பாராயோ



-அருட்கவி. சீ.விநாசித்தம்பி புலவர்

அன்னாரது குருபூசைத்தினமானது இன்று குரோதி வருடம் கார்த்திகை மாதம் இருபத்து ஆறாம் நாள் புதன்கிழமை (11.12.2024) அவரது சமாதியில் மு.ப. 11.00 மணியளவில் பூசைகளுடன் ஆரம்பமாகி இடம்பெறும். இந்நிகழ்வில் அன்பர்கள் அனைவரும் வருகை தந்து பூசை நிகழ்வில் கலந்து, அதனைத் தொடர்ந்து அன்னசுரபி மண்டபத்தில் இடம்பெறும் மதிய போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(ஙி-1055)

நாகேஸ்வரம்,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

மகள்
திருமதி.தி.ஸ்ரீரங்கநாயகி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இலங்கையை வீழ்த்தி தரவரிசையில் முதலிடம் பிடித்த தென்னாபிரிக்கா




ஜார்ஜ் பூங்கா செயின்ட் மைதானத்தில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 109 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

348 ஓட்டம் என்ற இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியானது போட்டியின் நான்காம் நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 205 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.குசல் மெண்டிஸ் மற்றும் தனஞ் சய டி சில்வா ஆகியோர் தலா 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இதனால் இலங்கையின் வெற்றிக்கு 5 விக்கெட்டுகள் மீதமிருந்த நிலையில் 143 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது.

இந்த நிலையில் போட்டியின் ஐந்தாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்க நீண்ட நேரம் தாக்குபிடிக்காத இலங்கை அணியானது மேலதிகமாக 33 ஓட்டங்களை மாத்திரம் பெற்று மீதமிருந்த 5 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதனால் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரினை தென்னாபிரிக்கா 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியதுடன் 2025 ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசையில் 63.33 புள்ளிகளுடன் முதலிடத்துக்கும் முன்னேறியது. (6-8)

## களத்தில் ஏற்பட்ட மோதல்

### ❖ சிராஜுக்கு அபராதம்
### ❖ ஹெட்டுக்கு எச்சரிக்கை




இந்தியா - அவுஸ்திரேலியா மோதிய 2ஆவது டெஸ்ட்டின்போது மோதல் போக்கில் ஈடுபட்டதாக இந்திய வேகப் பந்து வீச்சாளர் முகமது சிராஜுக்கு ஆட்ட ஊதியத்தில் 20 சதவீதத்தை ஐசிசி அபராதமாக விதித்தது. அந்தச் சம்பவத்தில் தொடர்புடைய அவுஸ்திரேலிய பட்டர் டிராவிஸ் ஹெட்டும் ஐசிசி ஆல் எச்சரிக்கப்பட்டார்.

பார்டர் - காவஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடருக்காக இந்திய அணி அவுஸ்திரேலியா சென்றுள்ளது. பெர்த் நகரில் இரு அணிகளும் மோதிய முதல் டெஸ்ட்டில் இந்தியா 295 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. பின்னர் அடிலெய்டில் சமீபத்தில் பகலிரவாக நடைபெற்ற பிங்க் பந்து டெஸ்ட்டில் அவுஸ்திரேலியா 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்று அசத்தியது.

இந்த ஆட்டத்தின் 2ஆவது நாளில் அவுஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸில் டிராவிஸ் ஹெட் அதிரடியாக சதம் கடந்தார். அவர் 140 ரன்கள் எடுத்திருந்த போது, முகமது சிராஜ் பந்து வீச்சில் ஸ்டம்ப்பை பறிகொடுத்தார். முக்கியமான விக் கெட்டை வீழ்த்திய உற்சாகத்தில் கொண்டாடிய சிராஜ், களத்திலிருந்து வெளியேறுமாறு ஹெட்டை நோக்கி ஆக்ரோஷமாக செய்கை காட்டினார். இதனால் ஹெட், சிராஜ் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பான விசாரணையின்போது சிராஜ், ஹெட் இருவருமே தங்களது செயலை ஒப்புக் கொண்டதாகத் தெரிவித்துள்ள ஐசிசி, நடத்தை விதிகளை மீறியதற்காக சிராஜுக்கு ஆட்ட ஊதியத்தில் 20 சதவீதம் அபராதம் விதித்ததாகவும் அத்தகைய அபராதத்துக்கு ஆளாக நேரிடும் என ஹெட்டுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3273

**தனா**

குட்டி இளவரசி: நான் முதல் தடவை சமையல் செய்திருக்கேன்
அம்மா: போய் முதலில் காகத்துக்கு வச்சிட்டு வாடி
காகம்: நான் என்ன இளிச்ச வாயனா...



**சாலினி**

ரீசார்ஜ் முடிய போகும் போது தான் தெரியுது



நாட்கள் எவ்வளவு வேகமாக போகுது என்று...

**டினு**

உடனே தூக்கம் வந்திடுது மாமா
படுத்த உடனே தூக்கம் வாறது நல்லது தானே மாப்பிள்ளை
படுத்த உடனே இல்லை மாமா வேலைக்கு போனதுமே வந்திடுது



**யதுர்சன்**

கஷ்டம் வரும்போது மட்டும் "கடவுளே எனக்கு மட்டும் ஏன் இந்த சோதனை" என்று கேட்குறீங்களே...



என்றைக்காவது "கடவுளே எனக்கு மட்டும் ஏன் இந்த சந்தோசம்" என்று கேட்டு இருக்கிறீங்களா...

**மதுசன்**


செய்த பாவத்திற்கு நரகத்திற்கு தான் போவோம் என்கிறதுல யாருக்கும் வருத்தமில்லை..



அங்க நெட் கனெக்ஷன் இருக்கும் என்கிறதில தான் வருத்தமே இருக்கு...

**கதிர்**

இன்னும் மூன்று வாரத்துல எல்லாம் மாறிடும்
எது வாழ்க்கையா? இல்லை காலண்டர்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமானது சுற்றிவளைப்பு

# அதிக விலைக்கு அரிசி விற்றால் இனி சிக்கல்!

(கொழும்பு)

**அரசாங்கத்தினால் வழங்கப்படும் அதிகபட்ச விலைக்கு மேல் அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டு பிடிக்கும் வகையில் நேற்று முதல் சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரி வித்துள்ளது.**

நேற்று முன்தினம் அரிசிக்கான அதிகபட்ச விலையை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இந்தத் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டதாக அந்த அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார்.

புதிய அரிசி விலை அறிவிக்கப்பட்டுள்ள பின்னணியில், அதற்கு மேல் அரிசி விற்பனை செய்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரிசி விற்பனையில் ஏதேனும் முறையற்ற அல்லது அதிக விலை இருந்தால் அவர் கள் அதைப் பற்றி முறைப்பாடு செய்யலாம்.

நுகர்வோர் அதிகார சபையின் 1977 என்ற இலக்கத்திற்கு மாவட்ட அலுவலகங்கள் மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் தலைமை அலுவலகத்திற்கு முறைப்பாடு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

# புதிய டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம்

## அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

தற்போதைய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு பதிலாக புதிய டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரத்தை விரைவாக அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப் படும் வரை தற்போதைய முறையை தொடர்ந்து நடை முறைப்படுத்தவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை கருத்திற்கொண்டு இந்த டிஜிட்டல் சாரதி அனுமதிப் பத்திரம் விரைவில் அறிமுகப்படுத் தப்பட உள்ளது.

தற்போது ஸ்மார்ட் அட்டை சாரதி அனுமதிப்பத்திர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் கடந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த நிறுவனங்களுக்கு இடையே யான தரவுப் பரிமாற்ற வசதிகளை வழங்கி புதிய தொழில் நுட்பத்திற்கமைய உலகில் பல நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவது சிறந்ததென அரசு கண்டறிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


## பொது அறிவித்தல்-வலிகாமம் தெற்கு பிரதேச சபை

1972 ஆம் இலக்க 17/06/2016 ஆம் திகதிய வர்த்தமானி பிரசுரத்திலுள்ள எமது சபைக்குச் சொந்தமான, ஏழாலை கிழக்கு J/204 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள கீழ்காட்டப்படும் வீதியினை பெயர்மாற்றம் செய்யுமாறு அப் பகுதிமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எமது சபையைக் கோரியுள்ளனர். விபரங்கள் வருமாறு

தற்போதைய பெயர் - ஆத்மஜோதி முத்தையா வீதி, வீதிஇலக்கம் NJVSE 334 நீளம் 275 மீற்றர் அகலம் 6 மீற்றர். மாற்றப்படவுள்ள பெயர்:- **இலந்தை கட்டி வீதி**

வீதியின் ஆரம்பம் :- மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் வீதி, வீதியின் முடிவு:- காசிவாசி செந்திநாதையர் வீதி

எனவே இவ்வீதி பெயர்மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 25/12/2024 ஆம் திகதிக்குள் எழுத்துமூலம் செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம் எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**சாரதா உருத்திரசம்பவன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.11.12.2024**

(சி-1768)

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 02 - 1975



மறைவு 09 - 12 - 2024

**அமரர்.சிவகுரு சிவபூங்கா**

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவபூங்கா அவர்கள் நேற்று முன்தினம்(09.12.2024) திங்கட்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், பூபாலசிங்கம், சிவானந்தம், கனேசலிங்கம், நந்தகோபால், வடிவேல், வனிதா, சிவபகிரதி, சிவநாதன், அஜந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2024) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவரசந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-1765)

கரணவாய் தெற்கு
கரணவாய்

தகவல்
குடும்பத்தினர்


# இராசிபலன்

11.12.2024
கார்த்திகை 26, புதன்கிழமை
ஏகாதசி முன்னிரவு 11.06 மணிவரை

ரேவதி முற்பகல் 10.04 மணிவரை
சுபநேரம் -4.49-6.19 மணிவரை
இராகுகாலம் 12.19-1.49 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம் - பூரம்.

**வளவன்**


மேஷம்

எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவுப் பலிதமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.


கடகம்

உங்களின் யோசனைக்கு நல் வரவேற்பு கிடைக்கும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், போசன சுகமுண்டு.


துலாம்

பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


மகரம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


ரிஷபம்

விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஊர்மாற்றம் இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.


சிம்மம்

வீட்டை சிரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


விருச்சிகம்

பொது வாழ்வில் புகழ்கூடும், திட்டமிட் காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியமான நாள்.


கும்பம்

குடும்பப் பொறுப்புக்கள் கூடும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும்,முயற்சிகளில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும்.


மிதுனம்

எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், மற்றவர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


கன்னி

குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், தேக நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.


தனுசு

கேளிக்கைகள் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**தவறானதைச் செய்து எவரும் பெருமையடைய முடியாது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாகாண செயற்பட்டு மகிழ்வோம் போட்டி

## கிளிநொச்சியில் ஆரம்பம்



(கிளிநொச்சி)

வடக்கு மாகாண ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் மாகாணமட்ட போட்டி நேற்றுக் காலை கிளிநொச்சியில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

கிளிநொச்சியிலுள்ள வடமாகாண விளையாட்டுக் கட்டடத்தொகுதி மைதானத்தில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட் தலைமையில் இடம்பெற்ற போட்டியினை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களைச் சேர்ந்த 13 கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆரம்பப்பிரிவு மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர். (6-8-316)

# ஆங்கில கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்களால் எழுதப்பட்ட மலரும் மொட்டுகள் (Blooming Buds) என்ற ஆங்கில கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி ஆங்கில பாட விரிவுரையாளரும் கலாசாலையில் இடம்பெற்றுவரும் கல்விமாணி கற்கை நெறி இணைப்பாளருமாகிய ம. பிரபாகரன் பிரதம விருந்திராகக்கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைப்பார்.

கலாசாலையின் ஆங்கிலப் பாட விரிவுரையாளர் அருள்லிங்கம் சுஜீவாவின் நெறிப்படுத்தலில் ஆசிரிய மாணவர்கள் ஆக்கிய கவிதைகள் நூலில் இடம்பெற்றுள்ளன. (6-8-33)

# ஆரம்பக்கல்வி கற்கைநெறி விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கல்விப் பொதுதராதரப் (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கா.பொ.த சாதாரண தர பரீட்சையில் முதலாம் மொழி கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளி உயர்கல்வி சான்றிதழ் (மட்டம் 2) நிகழ்ச்சித் திட்டத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட அடிப்படை மட்டங்களில் குறைந்தது 30 திறமை மட்டங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது SLQF மட்டம் 2 அல்லது அதற்கு மேல் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளினால் (இலங்கை) வழங்கப்பட்ட ஆசிரிய பயிற்சி சான்றிதழ் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சமமான அல்லது மேலான உயர் தகைமைகள் கொண்டிருக்க வேண்டும்.

மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் எதிர்வரும் 26.01.2025 அன்று நடத்தப்படும் தேர்வு பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது. விண்ணப்பப் படிவங்களை WWW.OU.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிர வேசித்து எதிர்வரும் 08.01. 2025 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்.பிராந்திய நிலையம் பிறவுண்வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 222 3374 எனும் தொலைபேசி ஊடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-8)

# கலட்டி வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானத்தில் பெருங்கதை படிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விநாயகர் விரதம் (பிள்ளையார் பெருங் கதை) எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தினமும் 11.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜையுடன் பிள்ளையார் கதை படிப்பு நடைபெறும்.

எதிர்வரும் 3.1.2025 வெள்ளிக்கிழமை பகல் 11.30 மணிக்கு சதுர்த்தி உற்சவமும் 4 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு மஹாகணபதி ஹோமமும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜையுடன் விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருதலை தொடர்ந்து பெருங் கதை படிப்பு பூர்த்தியாகும் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (6-8)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் இணைந்து 25 ஆவது வருடமாக நடத்தும் இரத்ததானமுகாம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம் பெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை கருகம்பனை நூலகத்தில் நடைபெறவுள்ள இரத்த தான முகாமில் தன்னார்வலர்களை கலந்து கொண்டு குருதித்தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# கைவிடப்பட்ட நிலையில் மோ.சைக்கிள் ஒன்று மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி பருத்தித்துறை கிராமக்கோட்டில் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் சத்தம் ஒன்று கேட்டதாகவும் திருடன் என்ற அச்சத்தில் வெளியே வராது வீடுகளுக்குள் இருந்த மக்கள் விடிந்ததும் வெளியே வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் ஒன்று காணப்பட்டுள்ளது.

மாதா சொருபத்தோடு மோதிய நிலையில் மோட்டார் சைக்கிள் மோதிய நிலையில் காணப்பட்டுள்ளதை அவதானித்த மக்கள் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

உடனடியாக குறித்த பகுதிக்குச் சென்ற பருத்தித்துறை பொலிஸார் மோட்டார் சைக்கிளினை மீட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# தேரடிச் சித்தரின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குரு பூசை நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள நினைவாலயத் தில் நடைபெறவுள்ளது.

திருமுறை நற்சிந்தனைப் பாடல்களைத் தொடர்ந்து, காலை 11 மணிக்கு ஈழத்துச் சித்தர்களும் திருவண்ணாமலையும் எனும் தலைப்பில் ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சிவநாதனின் சொற் பொழிவு நிகழ்வும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு சிறப்பிதழாக அமைந்த கலைமலர் சஞ்சிகையின் வெளியீட்டு விழா நேற்று செவ்வாய்க்கிழமை கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

PHARMACY TECHNICIAN

NATIONAL CERTIFICATE - NVQ LEVEL 4

PREPARATORY COURSE FOR OCCUPATION OF PHARMACY TECHNICIAN

மருந்தகங்களில் பணி புரிபவர்களுக்கு (PHARMACY ASSISTANTS) "மருந்தக தொழில்நுட்பவியலாளர்" சான்றிதழை NATIONAL APPRENTICE & INDUSTRIAL TRAINING AUTHORITY (NAITA) வழங்கி வருகிறது. போதிய ஆங்கில அறிவுடன் மருந்தகங்களில் பணியாற்றுபவர்கள் மேற்படி தேசிய சான்றிதழ் பெற்று வெளிநாடுகளில் (கனடா, UK) வேலை வாய்ப்பு பெறக்கூடியதாக உள்ளது.

இந்தப் பரீட்சையில் இலகுவாக சித்தியடைவதற்கான ஆறுமாத கால பயிற்சி வகுப்புகளுக்கு Jaffna College Pharmacy Class இல் 03.01.2025 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு 04.01.2025 சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்பு:- நேரு SIR, யாழ்ப்பாணக்கல்லூரி (வெளிவாரி பட்ட படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(2728)

T.P:- 077 316 4251

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரிசி தட்டுப்பாட்டின் பின்னணியில் பாரிய அரசியல் சூழ்ச்சி

## சுட்டிக்காட்டினார் அமைச்சர் வசந்த சமரசிங்க

**(கொழும்பு)**

**தேர்தலில் படுதோல்வியடைந்த தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்க சூழ்ச்சி செய்கின்றனர் என வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.**



அரிசி தட்டுப்பாட்டின் பின்னணியில் பாரிய அரசியல் சூழ்ச்சி உள்ளது. அனைத்து சூழ்ச்சி களையும் சட்டத்தின் ஊடாக தோற்கடிப்போம் என்றும் குறிப் பிட்டார்.

அரிசி, தேங்காய் உட்பட அத்தியாவசிய உணவு பொருட்களுக்கான தட்டுப்பாடு குறித்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரிசி உற்பத்தியாளர்களை நெருக்கடிக்குள்ளாக்குவதோ அல்லது அவர்களின் தொழிற்றுறையை கேள்விக்குள்ளாக்குவதோ எமது நோக்கமல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை கொள்வனவு செய்து அவற்றை அரிசியாக்குவதற்கான புதிய திட்டங்களை அரச கட்டமைப்பில் முன்னெடுப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மாபியாக்களுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என அவர் தெரிவித்தார். (நி-8)

# வைத்தியர்களின் ஓய்வு வயதை நீட்டிக்க நடவடிக்கை

(கொழும்பு)

வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக நீட்டிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கி யுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் அலோக பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான நடவடிக்கைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதன்படி தற்போது 62 வயதாகும் வைத்தியர் ஒருவரின் ஓய்வு வயது மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப் படும். (நி-8)


**யாழ்ப்பாணம் மாநகரசபை**

**கழிவகற்றல் சேவைக்கு கழிவகற்றல் கூலி உட்பட உழவு இயந்திரங்களை சாரதியுடன் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்விகள்-2025**

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டார ஆதனங்களிலிருந்து வெளியேற்றப்படும் திண்மக்கழிவுகளினை வகைபிரித்து எடுத்துச் சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு சாரதியுடன் உழவு இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 11.12.2024- 24.12.2024 ஆம் திகதிவரை சபையின் கொள்வனவுப்பகுதியுடன் தொடர்பு கொண்டு கேள்விக்குரிய கூறுவிலைப்படிவங்களினைப் பெற்றுப் பூர்த்திசெய்து எதிர்வரும் 24.12.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**கேள்வி திறக்கும் திகதி : 24.12.2024**
**நேரம் : பிற்பகல் 03.00 மணி.**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-1766)


# கேக் விலையை குறைக்க முடியாது

## பேக்கரி உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கேக் விலையை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

கேக் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலை மற்றும் வரி அதிகமாக இருப்பதால் கேக் தயாரிப்பில் அதிக செலவு ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, கேக் உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களான நல்லெண்ணெய், கோதுமை மா, முட்டை உள்ளிட்டவற்றின் விலை குறைக்கப்பட்டால், கேக் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

# மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் மானியத்தில் மாற்றம்

(கொழும்பு)

அடுத்த 5 மாதங்களுக்கு மீனவர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் மானியமாக மாதாந்தம் 9,375 ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட விரைவு சிறிய மீன்பிடிப் படகுகளுக்கு இந்த மானியம் வழங்கப்பட உள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ இந்தத் தகவலை தெரிவித்தார்.

முன்னர் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் மானியத்தை இலகுபடுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார். (நி-8)


**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்**

**2025 ஆம் ஆண்டுக்குரிய இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல்**

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 01.01.2025ஆம் திகதி தொடக்கம் 31.12.2025ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 11.12.2024 - 18.12.2024ஆம் திகதி பி.ப 2.30 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 19.12.2024 ஆம் திகதி மு.ப 11.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :19.12.2024ஆம் திகதி மு.ப 11.00மணிக்கு

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை

**2025 ஆம் ஆண்டுக்குரிய இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 15,000.00 | 763,895.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 1,000.00 | 10,000.00 | 108,854.17 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 1,000.00 | 10,000.00 | 167,200.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 1,000.00 | 15,000.00 | 1,014,695.00 |
| 2 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 1,000.00 | 15,000.00 | 837,045.00 |
| 3 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 1,000.00 | 15,000.00 | 609,844.59 |
| 4 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 20,000.00 | 1,473,691.87 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 766,483.25 |

கேள்வி அறிவித்தல் தொடர்பான நிபந்தனைகளை 05.11.2024 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பார்வையிட முடியும் அத்துடன் அலுவலக நாட்களில் காலை8.30 - மாலை4.15 மணி வரை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(சி-1767) 11.12.2024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

### பங்களாதேஷ் அரசிடம் இந்தியா வலியுறுத்தல்



(டாக்கா)

பங்களாதேஷில் வாழும் இந்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அந்த நாட்டு அரசிடம் இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி வலியுறுத்தி உள்ளார்.

பங்களாதேஷில் இட ஒதுக்கீட்டை எதிர்த்து மாண வர்கள் நடத்திய போராட்டம் பெரும் கலவரமாக மாறி யது. இதன்காரணமாக கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி பிரதமர் ஷேக் ஹசீனா பதவியை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். தற்போது பங்களாதேஷில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு ஆட்சி நடத்தி வருகிறது.

இந்தச் சூழலில் பங்களா தேசம் முழுவதும் இந்துக் கள் மீதான தாக்குதல் அதி கரித்து வருகிறது. அதோடு பாகிஸ்தானோடு பங்களா தேஷ் அரசு அதிக நட்பு பாராட்டி வருகிறது. இதன் காரணமாக எல்லைப் பகு திகள் வழியாக இந்தியா வுக்குள் பாகிஸ்தான் தீவிர வாதிகள் ஊடுருவும் அபா யம் எழுந்திருக்கிறது.

ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி நேற்று முன்தினம் அரசு முறை பயணமாக பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு சென்றார். அங்கு வெளியுறவுச் செய லாளர் முகமது ஜசீம் உதினை சந்தித்துப் பேசி னார். இதன் பிறகு பங்களாதேஷ் வெளியுறவு ஆலோசகர் முகமது தவுகித் ஹுசைனுடன் அவர் பேச்சு வார்த்தை நடத்தினார். பின்னர் இடைக்கால அர சின் தலைவர் முகமது யூனுஸையும் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார். (நி-8)

# போரை நிறுத்...

## நெதன்யாகு திட்டவ...

**(ஜெருசலேம்)**

**இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் தொடர்பான முயற்சிகள் தொடர்ந்து நடைெ... நிலையில் காசாவில் தற்போதைக்கு போரை... போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்தார்.**

போர் தொடங்கி கிட் டத்தட்ட 14 மாதங்கள் நிறைவுற்ற நிலையில், செய்தியாளர்களைச் சந் தித்த பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு "நாங்கள் இப்போது போரை நிறுத் தினால், ஹமாஸ் மீண்டும் வந்து தாக்க லாம்.

இது நடப்பதை நாங் கள் விரும்பவில்லை".

எதிர்காலத்தில் மீண் டும் தாக்குதல்கள் நடை பெறாமல் இருக்க "ஹமாஸை அழித் தொழி த்தல் அதன் இராணுவ மற்றும் நிர்வாகத்திறன் களை ஒழித்தல்" என்ற இலக்கை நிர்ணயித்து இருப்பதாக நெதன்யாகு மீண்டும் தெரிவித் தார்.

எனினும், இந்த இல க்கை நாங்கள் இன்னும் முழுமையாக அடைய வில்லை என்று சுட்டிக் காட்டினார்.

அமெரிக்க வெளியுற வுத் துறை செயலர் ஆண் டனி பிளிங்கன் அண் மையில் இஸ்ரேலுக்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தார்.

அதன் தலைமையை அடுத்தடுத்து கொன்று

## நாட்டைவிட்டு வெளியேற

### தென்கொரிய ஜனாதிபதிக்கு தடை



(சியோல்)

அவசரநிலை அறிவித் தது தொடர்பான விசா ரணை நடந்து வருவதால் தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் நாட்டை விட்டு வெளியே செல்வ தற்கு அந்த நாட்டின் நீதித் துறை தடை விதித்துள்ளது.

கிழக்கு ஆசிய நாடான தென் கொரியாவில், பட்ஜெட் மசோதா தாக்கல் செய்வது தொடர்பாக ஜனாதிபதி யூன் சுக் இயோல் மற்றும் எதிர்க் கட்சிகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதையடுத்து அவ சர நிலை இராணுவ சட்டத்தை அமுல் படுத்துவதாக ஜனா திபதி இயோல் கட ந்த வாரம் அறிவித் தார்.

இதற்கு எதிர் க்கட்சிக ளும் ஆளும் கட்சி யில் பல எம். பி.க்களும் எதி ர்ப்புத் தெரி வித்தனர்.

உடனடியாக பாராளு மன்றம் கூடி அவசர நிலையை நீக்கும் தீர் மானம் நிறைவேற்றப்பட் டது. இதையடுத்து சில மணி நேரங்களிலேயே அவசர நிலை அறிவிப்பை ஜனாதிபதி திரும்பப் பெற் றார்.

இதற்கிடையே அவரை பதவி நீக்கம் செய்ய பாராளு மன்றத்தில் தீர்மானம் தாக் கல் செய்யப்பட்டது. ஆளும் கட்சி எம்.பி.க்கள் பங்கேற் காததால் அது தோல்வி அடைந்தது. வரும் வாரத் தில் பதவி நீக்க மசோ தாவை மீண்டும் தாக்கல் செய்ய உள்ளதாக எதிர்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து, நீதித்துறை மூத்த அதிகாரிகள் தெரி வித்தாவது,


சட்டங்களின்படி, பதவி யில் இருக்கும் ஜனாதிபதி யைக் கைது செய்வதோ, விசாரிக்கவோ முடியாது. ஆனால் தேச துரோகம், கலகம் ஏற்படுத்தியது போன்ற குற்றச்சாட்டுகளில் விசாரிக்க முடியும்.

ஜனாதிபதி இயோல் திடீ ரென அவசரநிலை அறி வித்ததில் சதி ஏதும் இருக் குமா என பொலிஸ், தேசிய புனாய்வு அமைப்புகள் விசாரித்து வருகின்றன.

அதனால், இது தொடர் பாக அவரிடம் எந்த நேரத் திலும் நேரடியாக விசாரிக்க வேண்டியிருக்கலாம். அத னால், அவர் நாட்டை விட்டு வெளியே செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித்த னர். (நி-8)

## படித்தவர்கள் அதிகம் உள்ள...

## நாடு எது தெரியுமா?



(ஒட்டாவா)

உலகில் அதிகம் படித்தவர் களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் கனடா முதலிடத்தை பிடித்துள்ளதாக சர்வதேச ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விடயமானது பொரு ளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கனடாவில் 59.96% படித்தவர்கள் உள் ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு 52.68% கல்வி அறிவுடன் ஜப்பான் இரண்டாவது இடத்தில் உள்ளது. லக்சம்பர்... மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள... நிலையில், அமெரிக்கா மற்று... பிரிட்டன் ஆகிய முன்னண... நாடுகள் ஆறு மற்றும் எட்டாவ... இடத்தைப் பிடித்துள்ளன.

இந்தப் பந்தயத்தில் தெ... கொரியா அமெரிக்காவைப் பி... தள்ளி நான்காவது இடத்தி லு... ளது.

கல்வி தகுதி மிகுந்த நாடு... ளின் பட்டியலில் இஸ்ரேல் ஐந்... வது இடத்தை பிடித்துள்ள நி... யில் அயர்லாந்தைப் பின்தள்... பிரிட்டன் எட்டாவது இடத்திலு... ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ந்த மாட்டோம்!

## ...வட்டம்

...போர் நிறுத்தம்
...டைபெற்று வரும்
...போரை நிறுத்தப்
...மர் பெஞ்சமின்

...றும்
...டய
...டிக்
...புற
...ண்
...ண்
...க்கு
...மற்
...யை
...ற்று

குவித்தது.

அந்த வெற்றிகளுடன் பணயக் கைதிகளை வீட்டிற்கு அழைத்துச் சென்று அடுத்து என்ன நடக்கும் என்பதைப் புரிந்து கொண்டு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நேரம் இது" என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



## சிரியாவில் ஆட்சிக்கவிழ்ப்பு கனடா பிரதமா மகிழ்ச்சி



(ஒட்டாவா)

சிரிய ஜனாதிபதி பஸார் அல் ஆசாத் பதவி கவிழ்க்கப்பட்டதற்கு கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார்.

நீண்ட காலமாக அடக்குமுறையில் ஆட்சி செய்து வந்த அல் அசாட்டின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டமை குறித்து தனது அதிகாரபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் ஓர் பதிவினை இட்டுள்ளார்.

சிரிய நாட்டு மக்கள் புதிய சகாப்தத்தை ஆரம்பிக்க சந்தர்ப்பம் உருவாகி யுள்ளது.

சிரியாவின் ஆட்சி மாற்றம் குறித்து உன்னிப்பாக கனடா அவதானித்து வருவதாகவும் மனித உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் பிரதமர் ட்ரூடோ வலியுறுத்தியுள்ளார். (நி-8)

## 28 மில். அமெரிக்க டொலருக்கு ஏலம்போன காலணி



(வோஷிங்டன்)

புகழ்பெற்ற ஹொலிவுட் திரைப்படமான "தி விசார்ட் ஆஃப் ஓஸ்" -இல் நடிகை ஜுடி கார்லேண்ட் அணிந்திருந்த ஒரு ஜோடி சிவப்பு காலணிகள் கடந்த சனிக்கிழமை (டிசம்பர் 7) அமெரிக்காவில் நடந்த ஒரு ஏலத்தில் 28 மில்லியன் டொலருக்கு விற்கப்பட்டுள்ளன.

கடந்த 1939இல் வெளியான இந்தத் திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டதில் நான்கு ஜோடி காலணிகள் மட்டுமே எஞ்சியிருந்தன. அதில் ஒரு ஜோடி புகழ்பெற்ற ஹீல்ஸ் காலணிகள் தான் சமீபத்தில் ஏலமிடப்பட்டன. இதே காலணிகள் தான் முன்பொரு முறை மினசோட்டா அருங்காட்சியகத்திலிருந்து திருடப்பட்டன.

இதற்கான ஒன்லைன் ஏலம் ஒரு மாதத்திற்கு முன்பு தொடங்கியது. இந்தக் காலணிகளை ஏலம் விட்ட ஹெரிட்டேஜ் ஏல நிறுவனம் காலணிகளுக்கு சுமார் 25 கோடி ரூபாய் வரை மட்டுமே கிடைக்கும் என்று எதிர்பார்த்தது. ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் சுமார் 28 மில்லியன் டொலர் கிடைத்துள்ளது.

ஏலத்தில் இதுவரை விற்கப்பட்ட திரைப்படங்கள் தொடர்பான பழங்கால பொருட்களில் அதிக விலைக்கு ஏலம் போனது இந்தக் காலணிகள் தான் என்று ஹெரிட்டேஜ் ஏல நிறுவனம் கூறுகிறது.

பிரபல பாப் பாடகி அரியானா கிராண்டே நடித்த "விக்ட்" (Wicked) திரைப்படம் சமீபத்தில் வெளியானது.

இத்திரைப்படம், "தி விசார்ட் ஆஃப் ஓஸ்" கதையின் முந்தைய பாகம். எனவே இத்திரைப்படம் வெளியான பிறகு "தி விசார்ட் ஆஃப் ஓஸ்" திரைப்படம் குறித்து மீண்டும் பேசப்பட்டது.

இந்தப் பின்னணியில் தான் திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட காலணிகள் ஏலம் விடப்பட்டன. (நி-8)

...ள
...ா?



...சம்பர்க்
...த்துள்ள
...மற்றும்
...ன்னணி
...ட்டாவது

...தென்
...வப் பின்
...தி லுள்

...நாடுக
...ஐந்தா
...ன் நிலை
...ன்தள்ளி
...த்திலுள்
(நி-8)

## சிரியாவில் தொடர் தாக்குதல்கள் நடத்தும் இஸ்ரேலிய விமானங்கள்

(டமாஸ்கஸ்)

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ் உட்பட நாடு முழுவதும் இஸ்ரேலிய போர் விமானங்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு இராணுவ இலக்குகள் மீது 100 இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த தாக்குதல்களில் ஆயுத உற்பத்தி தொடர்பான ஆய்வு மையமொன்றும் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார, ஊடக அமைச்சுகளுக்கு புதிய செயலாளர் நியமனம்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுகாதார மற்றும் ஊடக அமைச்சுக்களின் புதிய செயலாளராக விஷேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவை நியமித்துள்ளார்.

அதற்கமைவான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்கவினால் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவிற்கு நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. (6-8)

# மதுவரி ஆணையாளர் நாயகமாக உதயகுமார

(கொழும்பு)

புதிய மதுவரி ஆணையாளராகச் சிறப்புத் தர அதிகாரி யு. எல். உதயகுமார பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆணையாளராகப் பணியாற்றியவர்.

மதுவரி ஆணையாளர் நாயகமாகப் பணியாற்றிய யு. டி. என். ஜயவீர. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு யு.எல். உதய குமார பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.(6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 450 | 500-650 |
| உருளைக்கிழங்கு | 240 | 200 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 1000 | 900 | 700 | 750-900 |
| தக்காளி | 350 | 350 | 300 | 250-300 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 350 | 250 | 150 |
| கோவா | 250 | 250 | 200 | 250 |
| கரட் | 150 | 250 | 200 | 200 |
| பூசணி | 120 | 150 | 150 | 120 |
| புடோல் | 160 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 60 |
| சின்ன வெங்காயம் | 250 | 240 | 350 | 150-300 |
| பெரிய வெங்காயம் | 350 | 280 | 350 | -- |
| பாகற்காய் | 1400 | 2000 | 1000 | 700-800 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 140 | 200 | 130 |
| பயற்றங்காய் | 650 | 600 | 600 | 350-420 |
| லீக்ஸ் | 250 | 350 | 300 | 300 |
| பீற்றூட் | 350 | 300 | 400 | 300 |
| கறிமிளகாய் | 600 | 650 | 800 | 600 |
| முருங்கைக்காய் | 850 | 800 | 1000 | -- |
| போஞ்சி | 600 | 300 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 200 | 150 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 350-450 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-170 |
| இராசவள்ளி | -- | 900 | 1200 | 700 |
| வெங்காயப்பூ | -- | -- | 500 | -- |
| முள்ளங்கி | 120 | 200 | 200 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | -- |
| வல்லாரை | 80 | 40 | 100 | 100 |
| ஈரப்பலா | 120 | 80 | 100 | 80 |

# இன்று ஒரு தகவல் 281



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# துறவி

ஒரு அரசனும் ஒரு அமைச்சரும் ஒரு நாள் மிகவும் சவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அரசன் அமைச்சரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். அமைச்சரே ஆசை இல்லாமல் ஒரு மனிதனாலே இருக்க முடியுமா என்று? ஏன் இருக்க முடியாது? துறவிகள் எல்லாம் அப்படிப்பட்டவர்கள் தானே என்றார் அமைச்சர்.அவர்கள் எல்லாம் உண்மையிலேயே ஆசையை விட்டவர்கள் தானா என்று கேட்டார் ராஜா. அப்படி தான் இருக்க வேண்டும் என்றார். அப்படி என்றால் ஆசையே இல்லாத துறவியை நான் பார்க்க வேண்டும் என்றார். அது என்ன பிரமாதம் அதற்கு நான் ஏற்பாடு செய்கின்றேன் என்றார் இவர். சொல்லிவிட்டு உடனே புறப்பட்டுப் போனார். அங்கே இங்கே தேடி னார்.அதன்பின் தான் அவருக்கு புரிந்தது. உண்மையான துறவியைக் கண்டு பிடிப்பது எவ்வளவு கஷ்டமான விடயம் என்று. இருந்தாலும் ராஜாவிடம் சொல்லிவிட்டேனே உண்மையான துறவியைக் காட்டுகின்றேன் என்று. இப்போது என்ன செய்வது.ராஜா சொன்னபடி நடக்கவில்லை என்றால் அவருக்கு கோபம் வந்துவிடும்.

அமைச்சர் யோசனை செய்தார். அவருக்கு ஒரு வழி தெரிந்தது. அது தான் சரி என்று முடிவு செய்தார். அதாவது அந்த ஊரிலே அவருக்கு தெரிந்த நாடக நடிகர் ஒருவர் இருந்தார். நன்றாக நடிப்பார். அவரைப் போய்ப் பார்த்தார். அதோ பார்! எனக்காக நீ ஒரு காரியம் செய்ய வேண்டும் என்றார். என்ன? என்று கேட்டார். நீ ஒரு துறவி மாதிரி சிறிது நேரம் நடிக்க வேண்டும். ராஜா வந்து பார்த்து விட்டு போகும் வரைக்கும் நீ நடி. அது போதும். அதற்காக உனக்கு பத்தாயிரம் ரூபாய் தருகின்றேன் என்றார். அவர் எந்தக் காலத்திலே இவ்வளவு பணத்தைப் பார்த்திருக்கின்றார். அதனாலே உடனே சரி என்று ஒத்துக் கொண்டார். அமைச்சர் அரண்மனைக்கு திரும்பி வந்தார். என்ன அமைச்சரே இன்னுமா ஒரு உண்மையான துறவி கிடைக்கவில்லை என்றார் ராஜா. உண்மையான துறவி ஒருவரை இப்போது தான் பார்த்து பேசிவிட்டு வந்திருக்கின்றேன்.அவர் நம் ஊருக்கு வெளியே குளக்கரையில்உள்ள ஒரு ஆலமரத்திற்கு அடியிலே உட்கார்ந்திருக்கின்றார் என்றார் இவர்.

அப்படி என்றால் உடனே புறப்படுங்கள் என்றார் ராஜா. பரிவாரங்களோடு புறப்பட்டார். அங்கே அந்த மரத்தடியிலே வேடம் போட்டுக் கொண்டு துறவி மாதிரி உட்கார்ந்திருந்தார். ராஜா நேராகப் போனார். அந்தத் துறவி காலிலே விழுந்து வணங்கினார். உடனே ராணியும் அவர் காலிலே விழுந்து வணங்கினார். அடுத்தபடியாக அமைச்சரும் விழுந்தார். அவருக்கு தெரியும் தன்னுடைய ஆள் தான் என்று. இருந்தாலும் என்ன செய்வது நேரம். அதன் பின் பரிவாரங்கள் எல்லாம் துறவி காலிலே விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார்கள்.

ராஜா அதன்பின் தங்கத் தட்டிலே பொன்னையும் பொருட்களையும் வைத்து அந்தத் துறவியிடம் மிகவும் பணிவாக நீட்டினார். தாங்கள் தயவு செய்து இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அந்தத் துறவி பற்றில்லாதது போல் அதைப் பார்த்தார். எல்லாவற்றையும் துறந்த எனக்கு இது எல்லாம் எதற்காக ? என்று சொல்லி மறுத்து விட்டார். ஆகா உண்மையான துறவியைப் பார்த்து விட்டோம் என்கின்ற ஆனந்தம் ராஜாவுக்கு. மிகவும் நிம்மதியாக திருப்பதியாக திரும்பி வந்தார் அரண்மனைக்கு. அதன்பின் அமைச்சர் யாருக்கும் தெரியாமல் அந்த துறவியிடம் ஓடினார். சொன்ன பிரசாரம் பணத்தை நீட்டினார். இந்தப்பா உன்னிடம் சொன்னபடி பத்தாயிரம் ரூபாய் எடுத்துக் கொள் என்றார். அந்த ஆள் ராஜாவிடம் சொன்னது போன்றே எல்லாவற்றையும் துறந்த எனக்கு இது எல்லாம் எதற்காக வேண்டாம் என்றார்.

நடித்தவரைக்கும் போதும் இனிமேல் இந்த நாடக வசனம் எல்லாம் வேண்டாம். வேடத்தை கலை என்றார் அமைச்சர். இல்லை அது வேடம் இல்லை. இது உண்மை. கொஞ்ச நேரம் துறவி மாதிரி நடித்ததற்கே இந்தத் தேசத்து ராஜா, ராணி, அமைச்சர், பரிவாரங்கள் எல்லோரும் என் காலிலே விழுந்து வணங்குகின்றார்கள். அப்படி என்றால் உண்மையான துறவியாக இருப்பது எவ்வளவு பெருமையான விடயம். நான் உண்மையாவே துறவி ஆகப் போகின்றேன் என முடிவு செய்து விட்டேன் என்றார் அந்த நடிகர்.

வேடம் கூட எப்படிப்பட்ட விளைவுகளை உண்டுபண்ணுகின்றது பார்த்தீர்களா? நம் ஆள் ஒருவர். மிகவும் வசதியாகத் தான் இருந்தான். ஒரு நாள் அவன் சொத்து முழுவதும் திருடுபோய்விட்டது. அதற்குப்பின் இவன் துறவி மாதிரி ஆகிவிட்டான். ஊர் ஊராக சுற்றினான். ஒரு குரு நாதரைத் தேடிக் கண்டுபிடித்தான். அவரிடம் சீடனாகச் சேர்ந்து கொண்டார். அவனைப் பார்த்து ஒருவர் கேட்டார் நீ உண்மையான சீடன் தானா என்று. இல்லை சீடன் மாதிரி நடிக்கின்றேன் என்றான் அவன். அது குருவிற்கு துரோகம் இல்லையா என்றான் அவன். இல்லை நான் செய்வது ஒரு குரு துரோகம் இல்லை. என் குரு செய்தது தான் துரோகம். என்னுடைய பணத்தை கொள்ளையடித்தது அவர் தான். அதை எங்கே வைத்திருக்கின்றார் என்று கண்டுபிடிப்பதற்குத் தான் அவரிடம் வந்து சேர்ந்திருக்கின்றேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.மாவட்ட விவசாய கூட்டம் பலதரப்பட்ட விடயங்கள் ஆராய்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான இறுதி மாவட்ட விவசாய குழுக்கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயத் துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் முன்கொண்டுவரப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக நீர்ப்பாசன குளங்களின் தற்போதைய நிலைமைகள், பயிரழிவு மதிப்பீடு தொடர்பான பிரச்சினைகள், பூச்சித்தாக்கங்கள், துறைசார்ந்து தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், துறைசார்ந்த பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் விடயதான உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் அங்கத்தவர்கள், மாவட்ட விவசாய பிரிவின் உத்தியோகத்தர்கள் எனப்பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (6-8-316)

# இழுவைமடியை நிறுத்து!

# முல்லையில் நடைபவனி

(நெளுக்குளம்)

**“மீனவசமூகத்தின் உரிமைகளை வென்றெடுப்பதன் மூலம் கண்ணியமான வாழ்விற்கு எம்மை அர்ப்பணிப்போம், உணவு இறையாண்மையை உறுதிசெய்வோம்” என்னும் தொனிப்பொருளில் முல்லைத்தீவில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபவனி ஒன்று நேற்று இடம்பெற்றது.**




முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திற்கு முன்பாக ஆரம்பித்த இந்த நடைபவனியானது முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பிரதேசசபை கலாசார மண்டபம் வரை இடம் பெற்றது.

குறித்த நடைபவனியில் ஈடுபட்டிருந்தவர்கள் இந்தியன் இழுவைமடி ஆக்கிரமிப்பை நிறுத்துதல், மீனவசட்டத்தை உடன் அமுல்படுத்துதல், சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளை முற்றாக தடைசெய்தல், கனியமணல் அகழ்வைக் கட்டுப்படுத்தல், சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பண்ணை வளர்ப்புத் திட்டங்களை நிறுத்துதல், காற்றாலை மின்சாரத் திட்டத்தைத் தடை செய்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து கோசங்களை எழுப்பியவாறும், பாதாதைகளைத் தாங்கியவாறு நடைபவனியில் ஈடுபட்டனர்.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் 16 மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், மீனவர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

தொடர்ந்து கரைதுறைப்பற்று பிரதேசசபை கலாசார மண்டபத்தில் உலக மீனவ தின நிகழ்வுகள் இடம் பெற்றன. (6-8-299)

# மேய்ச்சல் தரவையின்மையால் அல்லல்படும் கால்நடைகள்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - கரை துறைப்பற்று கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழுள்ள ஆண்டான்குளம் மற்றும் தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளில் கால் நடைவளர்ப்பில் ஈடு படும் கால்நடை வளர்ப்பாளர்கள் மேய்ச்சல் தரவை இன்மையால் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் குறித்த ஆண்டான் குளம் மற்றும் தண்ணிமுறிப்புப் பகுதிகளில் 5000 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் காணப்படுகின்ற போதும் அந்த கால்நடைகளுக் குரிய மேய்ச்சல் தரவையின்மையால் வருடந்தோறும் 50 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழப்பதாக கால் நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் பல கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால் நடைகளை விற்பனை செய்கின்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தாகவும் கால் நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேய்ச்சல் தரவை தொடர்பான கோரிக்கைகளை உரிய தரப்புக்களிடம் பலதடவை முன் வைத்தும் இதுவரையில் அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான் குளம் பகுதிகளுக்கு நேற்று முன்தினம் கள விஜயம் மேற் கொண்டு அப்பகுதி கால்நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் மேய்ச்சல் தர வைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (6-8-299)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம் -பூராடம்<br>கி.பா-32<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: தனியார் மின்னிணைப்பு பொருத்துதல்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/14984 | பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா: 12 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSc,Teacher<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/14939 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:Master of IT, Software Engineer.<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம்<br>தொ.இ: B/14986 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/14941 |
| பிறப்பு:1989-இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>10 இல் சூரி செவ்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்:விவசாயம்,பெயின்டர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14987 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி.பா:31 1/2<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: B.pharm, Assistant Lecturer<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer<br>தொ.இ: G/14943 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 653





பல்லக்குக் கண்ணுக்கு மறையும் வரையில் வந்தியத்தேவனும் சோதிடரும் அதைப் பார்த்த வண்ணம் நின்றார்கள்.

பிறகு வந்தியத்தேவன் "கொடும்பாளூர் இளவரசி சில காலத்துக்கு முன்பு வரையில் பெரும் பயங்கொள்ளியாயிருந்தாள். இளைய பிராட்டியின் மற்றத் தோழிகள் இவளை அதற்காகப் பரிகசித்துக் கொண்டிருந்தார்கள். பொம்மை முதலையை நதியில் மிதக்க விட்டு இவளைப் பயமுறுத்திப் பார்த்தார்கள் நான் கூட அதில் ஏமாந்து போனேன். இப்போது திடீரென்று இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு தைரியம் எப்படி வந்தது? இவள் தனியே பிரயாணம் செய்யக் கிளம்பியது என்ன விந்தை? இளையபிராட்டி இதற்குச் சம்மதித்ததுதான் எப்படி?" என்றான்.

"எனக்கும் அது ஆச்சரியத்தையே அளிக்கிறது. சென்ற முறை இப்பெண் இந்தக் குடிசைக்கு வந்திருந்த போது திடீரென்று மயக்கம் போட்டு விழுந்து விட்டாள் தயங்கித் தயங்கி ஈனஸ்வரத்தில் பேசினாள். அந்தக் கொடும்பாளூர் இளவரசிதானா இவள் என்றே சந்தேகமாயிருக்கிறது. இன்று எவ்வளவு படபடப்பாகவும் துணிச்சலாகவும் பேசினாள்?"

"இப்படிப்பட்ட திடீர் மன மாறுதலுக்கு என்ன காரணமாயிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"ஏதோ முக்கியமான செய்தி இவளுடைய மனத்தில் ஒரு பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணியிருக்க வேண்டும்."

"அப்படி என்ன முக்கியமான செய்தி இருக்க முடியும்?"

"ஏன்? பொன்னியின் செல்வரைக் கடல் கொண்டு விட்ட செய்தியே போதாதா? இந்தப் பெண்ணுக்கும் இளவரசருக்கும் திருமணம் நடக்கக் கூடும் என்று பேச்சாயிருந்ததே!"

இவ்விதம் சோதிடர் கூறிய போது, வந்தியத்தேவன், 'பொன்னியின் செல்வரைக் கடல் கொண்டுவிட்ட செய்தியா, அல்லது அவர் பிழைத்து நாகப்பட்டினத்தில் இருக்கிறார் என்ற செய்தியா அல்லது பூங்குழலியைப் பற்றி நான் கூறிய செய்தியா எது இவளுக்கு இத்தகைய அதிர்ச்சியை அளித்திருக்கக் கூடும்?' என்று சிந்தனை செய்தான்.

ஆம் சோதிடரே! கொடும்பாளூர் வம்சத்தார் பரம்பரையான வீரசைவர்களாயிற்றே! இந்தப் பெண்ணுக்குத் திடீர் என்று புத்த மதத்தில் பற்று உண்டாவானேன்?" என்றான்.

"பூர்வஜன்ம வாசனையாயிருக்கலாம்" என்றார் சோதிடர். "நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குப் புறப்படுவானேன்?"

"அதுதான் எனக்கும் வியப்பை அளிக்கிறது!" "உம்முடைய சோதிட சாஸ்திரத்தில் பார்த்துச் சொல்ல முடியாதா?"

"தம்பி! சோதிட சாஸ்திரத்தின் மூலம் இதை எப்படி அறியலாம்? இது ஒற்றாடல் சாஸ்திரத்தைச் சேர்ந்தது."

"ஒற்றாடல் என்று ஒரு சாஸ்திரமா?"

"ஏன் இல்லை? பொய்யாமொழிப் புலவரின் திருக்குறளைப் பற்றி நீ கேட்டதில்லையா?"

"அப்படி ஒரு நூல் உண்டு என்று கேட்ட ஞாபகமிருக்கிறது."

"அந்த நூலில் 'ஒற்றாடல்' என்று ஓர் அதிகாரம் இருக்கிறது. அதில் பத்துப் பாடல்கள் இருக்கின்றன."

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## பொன்குடமும் மண்குடமும்



ஓர் ஊரில் இரண்டு பெண்கள் இருந்தார்கள். இருவரும் தோழிகள். அவர்கள் ஒன்றாகவே இருப்பார்கள்.

பள்ளிக்கூடம் போகும் போதும் சந்தைக்குப் போகும்போதும் நீர் கொண்டு வரச் செல்லும் போதும் இருவரும் ஒன்றாகவே செல்வார்கள்.

நீர் எடுக்கச் செல்லும்போது ஒருத்தி பொன் குடம் எடுத்து வருவாள். மற்றொருத்தி மண்குடம் எடுத்து வருவாள். நீர் எடுத்த பின் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வீட்டுக்குத் திரும்பி வருவார்கள்.

ஒருநாள் இருவரும் நீர் தூக்கிக்கொண்டு தத்தம் வீட்டுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் சாலையோரத்தில் ஒரு கால் வாய் வெட்டிக் கிடந்தது.

அந்தக் கால்வாயைக் கண்டவுடன் ஒருத்தி கேட்டாள் "தலையில் உள்ள குடத்தோடு இந்தக் கால் வாயைத் தாண்டவேண்டும். உன்னால் முடியுமா?" அதற்கு மற்றொருத்தி பதில் சொன்னாள் என்னால் முடியும். உன்னால் தான் முடியாது.

ஏன் முடியாது? வேண்டுமானால் இருவருமே தாண்டிப் பார்த்துவிடுவோம்" என்றாள் முதலில் கேட்டவள்.

இருவரும் அந்தக் கால்வாயைத் தாண்ட அதன் அருகில் சென்றார்கள்.

முதலில் ஒருத்தி தாவினாள். அவள் கால்வாயைத் தாண்டிவிட்டாள். ஆனால் அவள் தலையில் இருந்த பொன் குடம் கீழே தரையில் விழுந்து தண்ணீர் கொட்டிவிட்டது. குடமும் ஒரு பக்கம் நெளிந்துவிட்டது.

தொடர்ந்து தாவிய மற்றொருத்தியும் கால்வாயைத் தாண்டிவிட்டாள். அவள் தலையில் இருந்த மண்குடம் கீழே விழுந்து உடைந்து விட் டது. சுற்றிலும் தண்ணீர் சிந்தியது.

முதல் பெண் நெளிந்து போன பொன்குடத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் தண்ணீர் மொண்டுவர சென்றாள். இரண்டாவது பெண், தாயார் கோபிப்பாளே என்று பயந்து அழுது கொண்டே வெறும் கையோடு வீட்டுக்குத் திரும்பினாள்.

கருத்துரை : - பொன் குடம் உடைந்தால் பொன்னாகவேயிருக்கும். மண் குடம் உடைந்தால் மண்ணாகிவிடும். உயர்ந்த குணம் படைத்தவர்கள் வறுமையடைந்தாலும் பயனுள்ளவர்களாகவே இருப்பார்கள்.

இழிந்த குணம் படைத்த வர்கள் வறுமையுற்றால் எவ்விதப் பயனும் அல்லாதவர்களாகி விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமையாக வாழ்ந்து தேவையானவற்றை மட்டும் உபயோகித்தால், நம் அனைத்துத் தேவைகளும் இறுதியில் பூர்த்தியாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூட்டங்களை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது ஆடம்பர நிகழ்வுகளுக்கு அறவே இடமிருக்கவில்லை. இதனால் பெருந்தொகைப் பணம் மீதப்படுத்தப்பட்டுள்ளது.

தவிர, ஜனாதிபதி செயலகத்தின் செலவுகள் கணிசமாக மட்டுப்படுத்தப்பட்டிருப்பதையும் காண முடியும்.

அதேநேரம் பணத் தட்டுப்பாடு என்ற பேச்சு இப்போது இல்லாமல் போயிற்று.

ஆம், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதியை விடுவிப்பதில் பெரும் சிக்கல்கள் இருந்தன.

எனினும் நிதித்தட்டுப்பாட்டை முன்னிறுத்தி ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு சட்டம் இடம்தராது என்ற தவிர்க்க முடியாத நிலையில், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்றதும் அடுத்த கணமே பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியது. கூடவே பொதுத் தேர்தலுக்கான நிதியும் விடுவிக்கப்பட்டது.

அப்போதெல்லாம் காசுத் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை.

இப்போது கூட 2025 முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போதும் நிதித் தட்டுப்பாடு பற்றி எந்தக் கதையும் இல்லை.

ஆக, தேர்தல்களை ஒத்திவைப்பதற்காக நிதித் தட்டுப்பாடு என முன்னைய ஆட்சியாளர்கள் கூறியிருக்க வேண்டும்.

அல்லது பொது நிதியானது அரச தலைவர்களின் ஆடம்பரத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புரிதற்குரியது.

எதுஎவ்வாறாயினும் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நடத்துகின்ற சந்திப்புகள் மிகவும் எளிமையாக – குறித்த இலக்கை மையப்படுத்தி இடம்பெறுவதைக் காண முடிகிறது.

உதாரணத்துக்கு அரிசி ஆலை உரிமையாளர்களுடன் ஜனாதிபதி அநுர நடத்திய சந்திப்பின்போது, கோவைகளின் உதவியுடன் கலந்துரையாடலை நடத்தாமல், குறித்த அரிசியின் விலை தொடர்பில் அனைத்துத் தகவல்களையும் உள்வாங்கிக் கொண்டு அதுபற்றிய தெளிவுபடுத்தலை ஜனாதிபதி அநுர முன்வைத்ததைக் காண முடிந்தது.

மாறாக, அதே சந்திப்பை வேறு எந்த அரசாங்கம் நடத்துவதாக இருந்தாலும் மாநாட்டு மண்டபத்திலுள்ள மேசையின் இரு மருங்கிலும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் குந்தியிருந்து கோவைகளைப் புரட்டிப் புரட்டி பார்ப்பர். அங்குள்ள ஒலிவாங்கிகள் இயங்குவதும் நிறுத்தப்படுவதுமாக இருக்கும்.

இதைவிட விருந்துகள், நேர வீணடிப்புகள், போக்குவரத்து என ஏகப்பட்ட செலவு அரச நிதியிலிருந்து இட்டுக்கட்டப்பட்டிருக்கும்.

ஆனால் ஜனாதிபதி அநுர அந்தச் செலவுகளையெல்லாம் மீதப்படுத்தி வருகிறார்.

எனவே ஜனாதிபதியின் செலவுச் சிக்கனக் கொள்கை வெற்றி பெற வேண்டுமாயின், அரச நிறுவனங்கள் நடத்துகின்ற கூட்டங்களை மட்டுப்படுத்துவதும் குறுகிய நேரத்தில் கூட்டங்களை உச்ச பயன்பாடுடையதாக நடத்துவதும் அவசியமாகும்.

ஏனெனில், திணைக்களத் தலைவர்களுடன் உயர்மட்டம் அடிக்கடி கூட்டங்களை நடத்துவதனால் அரச நிர்வாகம் பயனுறுதித் தன்மையை இழந்து போகிறது.

எனவே இது விடயத்திலும் ஜனாதிபதி அநுர உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### இரட்டைவரி தொடர்பாக

## இலங்கை - இந்தியா இடையே உடன்படிக்கைக்கு அமைச்சரவை ஒப்புதல்

இரட்டை வரி விதித்தலை தவிர்த்தல் மற்றும் வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்துதலைத் தடுப்பதற்காக இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் ஏற்படுத்தப்படும் உடன்படிக்கைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

வருமானத்தின் அடிப்படையிலான வரி தொடர்பில் இரட்டை வரி விதித்தலைத் தவிர்த்தல் மற்றும் வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்துதலைத் தடுப்பதற்காக இலங்கை அரசு மற்றும் இந்திய அரசுக்கிடையிலான உடன்படிக்கைக்கு 2013 ஆண்டில் எட்டப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா Inclusive Framework of the Base Erosion and Profit Shifting (BEPS) Project இன் உறுப்பினர் என்பதனால், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான 20 அமைப்புகள் அணியின் செயற்பாட்டுத் திட்டத்தின் ஆகக்குறைந்த தராதரங்களை அமுல்படுத்துவதற்கான கடப்பாடு நிலவுகிறது.

அதற்கமைய 2013 ஆண்டில் கையொப்பமிடப்பட்டுள்ள இரட்டை வரி விதித்தலை தவிர்த்தல் மற்றும் வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்துதலைத் தடுப்பதற்கான உடன்படிக்கையை திருத்தம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதற்குத் தேவையான திருத்தங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள திருத்த புரட்டக்கோலுக்கு (விருப்புரிமை ஆவணம்) வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் உடன்பாடு மற்றும் சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

அதற்கமைய, திருத்தம் செய்யப்பட்ட புரட்டக்கோலில் கையொப்பமிடுவதற்கும், 2017 ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டரசு இறைச் சட்டத்தின் 75 (1) பிரிவுக்கு அமைய கையொப்பமிடப்பட்ட புரட்டக்கோலை அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (ம-7)

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சியில் இமாலய பிரகடன மாநாடு

(யாழ்ப்பாணம்)

சமாதான நல்லிணக்கத்தினை வலியுறுத்தும் இமாலய பிரகடன மாநாடானது இம்முறை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

அதன் பிரகாரம் கிளிநொச்சி மாநாடானது எதிர்வரும் 16ம் திகதி கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் மாலை 3 மணி தொடக்கம் 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

அதே நேரம் யாழ்ப்பாண மாநாடானது 17ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (ம-7)

### தேசியப் பட்டியல் ஊடாக

## பாராளுமன்றம் செல்லும் பைசர் முஸ்தபா

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக பைசர் முஸ்தபா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தின் கீழ் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி 3 ஆசனங்களைக் கைப்பற்றிய நிலையில் இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந்தன.

அதன்படி ரவி கருணாநாயக்க தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், மீதமிருந்த தேசியப் பட்டியல் ஆசனத்திற்கு பைசர் முஸ்தபா தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## வலம்புரி சங்குகளுடன் இருவர் பொலிஸாரால் கைது

18 இலட்சத்திற்கு விற்பனை செய்யத் தயார் செய்யப்பட்ட இரண்டு வலம்புரிச் சங்குகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜா-எல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவிற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஜா-எல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெலிகம்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 31 மற்றும் 32 வயதுடைய கொபேகனே பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் ஜா-எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இலங்கை மின்சார சபைக்கு 30 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

இலங்கை மின்சார சபைக்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியளிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

இது ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து இலங்கைக்கு வழங்கப்படும் முதலாவது சிறிய செலவின நிதி வசதித் திட்டமாகும்.

இந்த நிதியுதவி புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் பங்கை ஊக்குவிப்பதற்கும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் தனியாரின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கும் வழிவகுக்கும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்ஃபுமி கடோனோ தெரிவித்துள்ளார். (ம-7)

## 22 ரயில் என்ஜின்கள் இந்தியா நன்கொடை

இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு 22 ALCO டீசல் எஞ்சின்களை நன்கொடையாக வழங்குவதற்கு இந்தியப் புகையிரதச் சேவை விருப்பம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய முதலாவதாகக் குறித்த நன்கொடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு 22 ALCO டீசல் எஞ்சின்களை நன்கொடையாக இலங்கை அரசு சார்பாகப் பெற்றுக் கொள்வதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்பு குழுவை நியமிக்க

### அமைச்சரவை அனுமதி

தேசிய உணவு மற்றும் போஷாக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் உணவு பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் முதன்மைப் பணியாகும் என்ற வகையில், சகல பிரஜைகளுக்கும் குறைந்தபட்ச உணவுத் தேவையை போதியளவிலும் தரமாகவும் தாங்கிக்கொள்ளக் கூடிய விலையிலும் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவை, ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் நியமிப்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் சமர்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய,

* நாட்டுக்குள் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து உணவு வகைகளையும் உள்நாட்டில் உற்பத்தி செய்தல்.
* குறைந்தபட்சம் 03 மாதங்களுக்குப் போதிய உணவுத் தொகை இருப்பை உறுதிப்படுத்தல்.
* நாட்டிலுள்ள உணவுத் தொகை தொடர்பில் தகவல் கட்டமைப்பொன்றை நடத்திச் செல்லல்.
* உணவு பாதுகாப்புக்குத் தேவையான உற்பத்திகள், களஞ்சியம், விநியோகம், தொகை மற்றும் சில்லறை வியாபாரம் ஆகிய விடயங்களுக்காகத் தனியார் துறையின் பங்களிப்பையும் பெற்றுக்கொண்டு பயனுள்ள வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல்,

என்பனவே இந்த குழுவின் முதன்மை பணிகளாகும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமிருந்தும் நீரிருந்தும் நெல்லில்லை என்றால்...!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது விவசாயத்தை நாம் முறையாகக் கையாளாத காரணத்தால் பிறநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யும் நிலைக்கு மீண்டும் வந்து நிற்கின்றோம். அனைத்து வளங்களையும் கொண்ட இந்த தீவிலிருக்கும் மக்களுக்கு உணவுற்பத்தி செய்ய எம்மால் முடியவில்லை. ஆயின் எமக்கு எதைச் செய்ய முடியும் என்னும் வினை தொக்கி நிற்கின்றது.

2019 இல் நெல்லில் தன்னிறைவு கண்ட நாடு என்று அந்த வருடம் பெருமைப்பட்டுக் கொண்ட அளவிற்கு இப்போது அரிசியை இறக்குமதி செய்யும் நிலைக்கு வந்து சிறுமைப்பட்டுக் கொண்டுள்ளோம்.

கடந்த வருடங்களில் எமது விவசாயத்தை நாமே அலைக்கழித்தமையால் இந்த வினையென்று பாரம்பரியமாக நெற்செய்கை செய்துவரும் எம்மூர் தேவியாச்சி அடித்துரைத்தார். இவர் அடித்துரைத்தது இது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பேரிடியாக இருந்திருக்கும்.

காலங்காலமாக பாரம்பரிய இனங்களான மொட்டைக் கறுப்பன், மொறுங்கன் என மாறிமாறி பயிர் செய்து வயதான காலத்திலும் அதனைத் தானும் சேர்ந்து அறுவடையும் செய்து அடுத்த வருடத்து விதை நெல்லை வேறாகப் பிரித்தெடுத்து நன்றாக காயவைத்து பத்தாயத்திலும் மிகுதியை காய வைத்து அவித்து குத்தரிசியாக்கி அந்த வருட உணவுக்குமாக சேமித்து வைத்திருப்பார். தினமும் காலையில் பழஞ்சோறு, பழந்தண்ணி என்பது அவர் மனையில் வழக்கமான உணவு. அதுவும் பழைய மீன் குழம்பு சேர்த்து பரிமாறும் தன்மையே தனித்துவம்.

பழந்தண்ணி என்றவுடன் உணவு ஆய்வாளரின் அறிவுரை ஞாபகத்திற்கு வந்தது. பழந்தண்ணியில் எமது சமிபாட்டுத் தொகுதிக்கு குறிப்பாக வயிறு மற்றும் சிறுகுடல் பகுதிகளில் சமிபாடு அடைவதற்கும் அகத்துறுஞ்சுவதற்கேற்ற நிலைமையை உருவாக்குவதற்கும் தேவையான நன்மை தரும் நிறைவான பக்டீரியாக்களை [Probiotic] அதிகமாக இனப்பெருக்கும் சக்தி இருப்பதுடன் உணவில் காணப்படும் சமிபாடடையாத நார்ச்சத்துக்கள் [Prebiotic] நுண்ணங்கிகளுக்கு உணவாக இருப்பதனால் இவை பொதுவாக முழுமையான தானியங்கள், வாழைப்பழம், வெங்காயம் மற்றும் உள்ளி என்பனவற்றிலும் அதிகமாகக் காணப்படுகின்றன.

எமது உணவுத் தொகுதியில் உருவாகும் நன்மைதரும் சமிபாடடைய வைக்கும் நுண்ணங்கிகளின் பெருக்கத்திற்கு பழந்தண்ணீர் காரணமாக இருக்கின்றதென்றால் மலிவாக, நிறைவாக எமது வீட்டிலிலேயே தயாரிக்கக் கூடிய சுத்தமான, சுகாதாரமான உணவிருக்க எதற்கு கடைகளில் இவற்றை நாம் அதிக விலை கொடுத்து வாங்கி அருந்த வேண்டும். இது எம்மூர் அம்மாமாரினின் கைவண்ணம்.

எமது பாரம்பரிய நெல்லினங்களை பயிரிட்டு அதிலிருந்து பெறப்படும் இவ்வகையான நல்லுணவுகளை நாம் உண்ணத் தலைப்படுவோம். "உணவே மருந்து மருந்தே உணவு" என்னும் பொன் மொழிக்கு இது நல்லுதாரணம் அல்லவா.

இவை இப்படியிருக்க தலைப்பிற்கு வருவோம். எமது பிரதேசத்தில் நெல்லுற்பத்திக்கு தேவையாக நிலம் இருக்கின்றது. வடபகுதியில் ஒரு போகம் காலபோகத்தில் மழையை நம்பியும் குளங்களின் நீர்ப்பாய்ச்சலில் இருபோகமும் நெல் விளைவிக்கப்படுகின்றது. இந்த நெல் விவசாயத்தைச் சரியாக திட்டமிட்டு மழைவீழ்ச்சியின் தன்மையை முன்கூட்டியே கணித்து அதன் மூலம் விவசாய பெருமக்களை அறிவுறுத்தி முன்கூட்டியோயோ அல்லது பிந்தியோ விவசாய செய்கையை முன்னெடுத்தால் எமது நெற்செய்கையை காப்பாற்றிக் கொள்ளும் அதே நேரத்தில் நெற் பயிர்ச்செய்கை அழிவிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



இதற்காக வடபகுதியில் வானிலை ஆய்வு நிலையம் தனித்துவமாக இயங்குதல் அவசியமாகின்றது. எமது நாட்டின் வானிலை ஆய்வு மையத்துடன்இணைந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையும் விஞ்ஞான பீடம் மற்றும் விவசாய பீடமும் இணைந்தால் இன்னும் சிறப்பாக மக்களுக்காக குறிப்பாக வடபகுதி மக்களுக்கு சிறந்த முன்னறிவுப்புக்களை கொடுத்து அவர்களையும் விவசாயத்தையும் வருகின்ற இயற்கைப் பேரிடர்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும்.

நெற்செய்கையில் எங்கிருந்தோ வந்த ஆட்டக்காரி நெல்லினம் தற்போது வடபகுதியெங்கும் பரந்துபட்டு வளர்க்கப்படுகின்றது. சிறந்த விளைச்சலைத் தரும் நெல்லினமாக இருப்பதனால் விவசாயிகள் இதனை பயிர்செய்கின்றனர்.

ஆனால் ஆட்டக்காரி நெல்லினம் காலபோகத்தில் அதிகரித்த மழை வீழ்ச்சி இருந்தால் அதிலுள்ள காலநிலை சாதகமாக இருப்பதனால் எரிபந்த என்னும் பூஞ்சண நோய்த் தொற்று பரவி நெற்பயிர்களை அழிவுக்குள்ளாக்கி விடுகின்றது.

ஆட்டக்காரி நெல்லினம் எரிபந்தம் என்னும் பங்கஸ் நோய்க்கு எதிர்ப்புத் தன்மையற்றது. அதாவது எரிபந்த நோய் காலநிலை ஏதுவாக இருந்தால் இலகுவாக தொற்றுதலாகி விரைந்து பரவிவிடும் தன்மையுடையது. இந்த நெல்லினத்தை இவ்வாறான காலங்களில் பயிர்செய்வதை தவிர்த்தால் எரிபந்த நோய்த் தொற்றிலிருந்து அதன் பரவலிலிருந்தும் நெற்பயிர்ச் செய்கையை காப்பாற்றிக் கொள்ளலாம்.

எரிபந்த நோய் முதற்போகத்தில் வளர்த்த நெல்லின் அடிக்கட்டையிலிருந்தும் நோய்த் தொற்று ஏற்பட்ட விதை நெல்லிலிருந்தும் பரவுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளது. பரவ ஆரம்பித்து விட்டால் பின்னர் இந்தப் பூஞ்சண நோயைத் தடுப்பது மிகவும் கடினம்.

இப்போது எரிபந்த நோயுடன் இலை மடிச்சுக்கட்டி, பூச்சிப்பீடையும் நெற்பயிரை தாக்கியிருப்பதாக அறியக்கிடைக்கின்றது. காலபோகத்தில் நெற்பயிர் அனுகூலமான கால நிலையில் வளரும் போது மடிச்சுக்கட்டி என்னும் பூச்சிப்பீடையின் பெருக்கமும் அதனால் நெற்பயிர்களின் இலைகளில் அதன் புழுக்களினாலான தாக்கமும் அதிகரித்தே காணப்படும்.

இவ்வாறான அதி முக்கிய பீடைகளின் பெருக்கம் காலநிலையுடனிணைந்து நெற்பயிரினை மிகவும் பாரியளவில் பாதிப்பதனால் விவசாய பெருமக்கள் பீடை நாசினிகள் மற்றும் பூஞ்சண நாசிகளைப் பயன்படுத்தி பூச்சி பீடைகளையும் பூஞ்சண நோய்களையும் விரைந்து கட்டுப்படுத்தியே ஆகவேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகள் நெற்செய்கையில் மட்டுமல்ல ஏனைய பயிர்களிலும் இருப்பதனால் வருமுன் காப்பது சிறந்ததென்பதற்கிணங்க சிறந்த எதிர்வுகூறல்களின் மூலம் நோய் மற்றும் பூச்சி பீடைகளின் தாக்கத்தை எதிர்வுகொள்ள முடியும்.

சரி இவ்வளவு விடயங்களிலும் அதிகூடிய முக்கியமான அம்சமாக நெற்செய்கையாளர்களை கவரத்தக்க சரியான நெல் விலையும் அவற்றை சேமித்து வைக்கக் கூடிய சிறந்த களஞ்சிய வசதியும் இன்னும் பீடைகளை கட்டுப்படுத்தும் முறைகளும் அவசியம் தேவைப்படுகின்றது. அறுவடை செய்த நெல்லை சரியான முறையில் காயவைத்து அவற்றினை முறையாக சேமிப்பு வசதிகளுடைய கொள்கலன்களில் வைத்திருப்பதன் மூலம் பாதிப்படையாது நல் விதையாக சேமித்து சிறந்த விதைகளாக விதைக்க முடியும்.

எமது தேசத்தில் நிலவசதி பெருமளவில் உண்டு. மாறுபட்ட காலநிலை மற்றும் மண்ணமைப்பு இடத்துக்கிடம் மாறினாலும் நெற்பயிரினை பயிரிடுவதற்கான நிலம் எம்மிடம் அதிகளவில் உண்டு. இதைவிட நீர் வசதியும் எம்மிடம் உண்டு. மழையை நம்பிய காலபோகமும் நிலத்தடி நீரை நம்பிய சிறுபோகமும் நிலத் தடி நீரை வினைத்திறனாக பயன்படுத்தும் செயன்முறைகள். இருப்பினும் எம்மால் எமக்குத் தேவையான நெல்லை தளம் பலறாது உற்பத்தி செய்ய முடியவில்லை.

எமது ஆய்வுகள் இதனை மையப்படுத்தியதாக நெல்லுற்பத்தியில் விழுக்காடு என்பதில்லாமல் விவசாய உற்பத்தி பெருக்கம் அமைய வேண்டும். இதற்கான வழிவகைகளை கொள்கையளவிலும் தேசிய திட்டங்கள் மூலமும் நெறிப்படுத்தி விவசாய உற்பத்திக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில்...

அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மூன்றாம் திகதி வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடற்படையால் கைது செய்யப்பட்டு நீரியல் வளத் திணைக்களத்தினரினால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 18 இந்திய மீனவர்களும் நேற்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

18 மீனவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா ஆறு மாத சிறைத் தண்டனை வீதம் 18 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து அதை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்தார்.

மேலும் படகு ஓட்டிக்கு, தெரிந்து இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிய காரணத்துக்காக மேலும் 6 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது. (ம-7,60)

## படகு தயாரிப்பு...

களைப் பூர்த்தி செய்தல், தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் பெறுகை செய்தல் போன்றவற்றுக்காக நிதியொதுக்கீடுகளை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளதுடன், அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நேற்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இதுவரை கையொப்பமிடப்படாதிருப்பதுடன், மீன்பிடி, நீரியல்வள மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, இருதரப்புக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும், உத்தேச நிதி வழங்கல் காரைநகர் படகு தயாரிப்பு நிலையத்தின் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு புதிய அமைச்சரவை கொள்கை ரீதியான தீர்மானத்தை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. (ம-7)

## ஐந்து நாள்...

நிக்காததையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் மயங்கியுள்ளார்.

இந்நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வெள்ளியன்று...

செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய அரசின் முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## உதயங்க...

நிறைவேற்று அதிகாரி கபில சந்திர சேனவும் குறிப்பிடத்தக்க ஊழலில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு பயணத்தடை விதித்துள்ளது.

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊழலிற்கு எதிரான சர்வதேச தினம் மற்றும் சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு உலகில் ஊழல், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட வர்களைப் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா எடுக்கின்றது.

குறிப்பிடத்தக்க ஊழல், பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள் என 14 பேர் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை அமெரிக்கா இது தொடர்பிலான பட்டியலில் இணைத்துக் கொண்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வெளிநாட்டு செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய சட்டங்கள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 7031 சியின்படி இவர்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு தகுதியற்றவர்கள்.

மேலும் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் பல கொள்கைகளிற்கு இணங்க மேலும் பலரிற்கு விசாக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அமெரிக்க ஆராய்கின்றது என்று குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## விவசாயி...

உணவுத் திட்டம், உரலகெம் - உரல்கலி குழு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஸ்டேட் பேர்டிலைசர் கம்பெனி ஆகியவற்றால் செப்ரெம்பர் 20 அன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

குறித்த உரக் களஞ்சியத்தை ஏற்றிச் செல்லும் கப்பல் இன்று நாட்டிற்கு வரவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் உரக் களஞ்சியத்தை இலங்கை அரசிடம் கையளிக்கும் உத்தியோகபூர்வ வைபவம் நாளை 12ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட தகவல்களைக் கருத்தில் கொண்டு இந்த உரமானியம் வழங்கப்படவுள்ளது.

அதன்படி, மொத்த உரத்தில் 50% விவசாயிகளுக்கு நெல் மற்றும் பிற பயிர்களுக்குப் பயன்படுத்தவும், மீதமுள்ள 50% தென்னைச் செய்கைக்காகவும் விநியோகிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அர்ச்...

அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தான் தற்போது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்றும், தன்னை “சேர்” என்று அழைக்குமாறும் கூறி எம்மோடு முரண்பட்டார்.

அவரை சேர் என்று அழைக்க முடியாது என்று பதிலளித்ததற்கு, என்னை யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவியில் இருந்து அகற்றுவேன் எனவும், பாராளுமன்றத்திற்கு அழைத்து கேள்வி கேட்பேன் என்றும் கூறினார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் உள்நுழைந்து பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குழப்பம் விளைவிப்பதற்கு இடமளிக்க முடியாது.

மீண்டும் ஒருமுறை அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் குழப்பம் விளைவிக்க முற்படுவாராயின் அவர் வாசலிலேயே வைத்து தடுத்து நிறுத்தப்பட்டு, பாதுகாப்பு உத்தியோகத்தரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் எனக் குறிப்பிட்டுள்ளார்.(ம-7)

### மஹஜன சம்பத
திகதி 2024.12.10 — சீட்டிழுப்பு இலக்கம் 5681
R 3 8 0 1 9 9
அத சம்பத: R 0 1 9 9 — சீட்டிழுப்பு இலக்கம் 256
National Lotteries Board

### தன நிதானய
திகதி 2024.12.10 — சீட்டிழுப்பு இலக்கம் 1711
O 06 20 50 76 O
Double Chance 16283

### மெகா பவர்
திகதி 10/12/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2029
Q 19 07 08 38 48
109702

### லக்கி 7 VIP
திகதி 2024.12.10 — சீட்டிழுப்பு இலக்கம் 507
E 9 7 8 8 6 0 E

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3923 — சீட்டிழுப்பு திகதி 10.12.2024
V 16 17 44 70
V 160779

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.12.10 — சீட்டிழுப்பு இலக்கம் 990
விருச்சிகம் 10 22 33 51 விருச்சிகம்
132696 — 35

### உத்தியோகபூர்வ முடிவுகள் (DLB)
10.12.2024 — வெற்றி வாரம் 389
G 8 4 6 6 1 3
64760
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,001,988.00

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2655 — சீட்டிழுப்பு திகதி 2024.12.10 — தினம் செவ்வாய்க்கிழமை
20 40 60 66 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 73,128,924.00

### சனிதா
திகதி 10.12.2024 — வெற்றி வாரம் 4816
12 17 72 74 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,927,898.80
61092

### சசிரி
575 — 10.12.2024 — செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 32 42 44
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4367 — சீட்டிழுப்பு திகதி 10.12.2024 — தினம் செவ்வாய்க்கிழமை
05 32 33 37
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,866,036.40
104841

### கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 33 11 21 39 69
1831 — 10.12.2024 — செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.557,814,771.20

### அட கோடிபதி
செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம்: 2481 — சீட்டிழுப்பு திகதி: 2024.12.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,154,696.80
17 56 61 65 X
285689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோகட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (C21)

ஹப்பி சூப்பர்மாக்கட் உரும்பிராய் 48/= ~~80/=~~

077 773 0900



## பிரத்தியேக குழு வகுப்புக்கள்

தரம் 10, O/L மாணவர்களுக்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் மற்றும் தரம் 06 முதல் O/L வரை கணிதமும் தனியாகவோ/ குழுவாகவோ பல வருட அனுபவமிக்க ஆசிரியரால் புதிய ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகிக் கற்பிக்கப்படவுள்ளது. (2732)

077 645 2622



## பணி நிலை வேண்டுகை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைந்திருக்கும் போட்டோ கொப்பி வர்த்தக நிலையமொன்றுக்கு போட்டோ கொப்பி மற்றும் கணனி ஆகியவற்றில் முன் அனுபவமுள்ள பெண் பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு :

077 832 0964 (C-1774)



V2 VISA SERVICES

கனடா Visit Visas

077 77 20 322 / 077 77 19 322 Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-2773)


## தமது...

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரிட்டன் தூதரகத்தின் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளுக்கான முதனிலைச் செயலர் ஹென்றி டொனைட்டினை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை சந்தித்தார். இச் சந்திப்பின்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமைக்கு முதலில் வாழ்த்துக்களைத் தெரிவித்த முதனிலைச் செயலர், வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அறிவது தனது பயணத்தின் நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து இன்னமும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், குறிப்பாக மக்களின் காணிகள் கடந்த காலங்களில் அவர்கள் இடம்பெயர்ந்திருந்த சந்தர்ப்பங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் தமது ஆளுகைக்கு உட்பட்டதாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டமையால் தற்போது சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளது என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். விவசாயிகள் வாழ்வாதாரம் இதனால் கடுமையான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது என்று குறிப்பிட்ட ஆளுநர், வடக்கு மாகாணத்து மக்களின் முக்கியமான பிரச்சினையாக இது உள்ளது எனவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சில வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் இருப்பதால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் அவை விரைவில் பூர்த்தியாக்கப்பட வேண்டிய தேவை உள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வலி. வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசம் நீண்ட காலம் இருந்த வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டமை சிறந்த நடவடிக்கை எனக் குறிப்பிட்ட ஆளுநர், மக்கள் மேலும் வீதிகளை, காணிகளை விடுவிக்கக் கோருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன் பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள் மற்றும் வீதித் தடைகள் என்பன அகற்றப்பட்டுள்ளன என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளமையால் அதிகளவில் வருகின்றனர் எனக் குறிப்பிட்ட ஆளுநர் அடுத்த ஆண்டு முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலும் இளையோருக்கான வேலை வாய்ப்புக்களை வழங்கும் நோக்கிலும் பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கப்படவுள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பொதிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் விரைவில் அதற்கும் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் தமிழகத்தில் அண்ணளவாக ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக உள்ளனர் எனவும் அவர்கள் நாடு திரும்பினால் அவர்களுக்குரிய வாழ்வாதார, வதிவிட உதவிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தின் பிரதான வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டபோதும் உள்ளக வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்று குறிப்பிட்ட ஆளுநர் அவற்றை எதிர்காலத்தில் விரைந்து அபிவிருத்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும், தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலேயே அபிவிருத்திகளைச் செய்து முடிக்கலாம் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, ஐ.நா. முகவர் அமைப்புக்கள் ஊடாக பிரிட்டன் அரசாங்கம் கடந்த காலங்களில் வடக்கு மக்களுக்கு மேற்கொண்ட உதவிகளுக்கு ஆளுநர் நன்றிகளையும் தெரிவித்தார். (ம-7.33)


## காணவில்லை



கஜமோகன்(மோகன்)


நண்பர்களே இந்தப் புகைப்படத்தில் உள்ள நபர் நேற்று முதல் காணவில்லை அவரின் மனைவியும் 4 வயது பச்சிளம் குழந்தையும் அவரைத் தேடியவண்ணம் உள்ளார்கள். தயவுசெய்து இவரைக் கண்டால் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துக்கு அறியத் தரவும். இவரை இறுதியாக சாவகச்சேரியில் கண்டதாக தகவல் கிடைத்துள்ளது. நண்பர்கள் அவசரமாகத் தகவலைப் பகிர்ந்து உங்களால் இந்தக் குழந்தையின் தந்தையைக் கண்டுபிடிக்க உதவி செய்யவும்.

மனைவி : 075 382 3347

077 017 4279, 076 666 3319, 077 163 9802 (2737)


## மரண அறிவித்தல்

பிறப்பு 17 - 05 - 1944



இறப்பு 09 - 12 - 2024

## தம்பையா தங்கராஜா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தங்கராஜா அவர்கள் நேற்று முன்தினம் (09.12.2024) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கோமளவல்லி (குஞ்சு) அவர்களின் பாசமிகு கணவரும் காசினி, தரணீதரன், பிரியதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன், விஸ்னுகா, ஜெசிந்து ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிஸ், தருண், அயிரா, மெல்லினா, ஜெயனன், அஞ்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சுப்பிரமணியம், நடராஜா மற்றும் இராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணி) இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய தபாற் கந்தோர்,
சித்தன்கேணி. (c-1771)

தகவல்: குடும்பத்தினர்.
077 9124 042, 0779361 014


## சிறிராம் ஜுவல்லர்ஸ்



புத்தாண்டை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான விசேட சலுகை

22 கரட் தங்க ஆபரணங்களுக்கான செய்கூலி சேதாரத்தில் 20% - 50% வரையிலான விலைக்கழிவு வழங்கப்படும்.

வாங்கும் அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும்.

இல.158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-1772)

077 165 1729, 077 773 0567, 021 222 8334


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 13.11.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் சர்வேஸ்வரலலிதா கமலநாதன்



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 11-12-2024 புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 13.12.2024 வெள்ளிக்கிழமை நண்பகல் 12:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் நடைபெறும். இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (619)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.